## ஒபெட் சிகிச்சைக் கட்டணங்களைச் செலுத்த எனது மெடிசேவைப் பயண் படுத்த முடியுமா?

- ஆம், சில ஒபெட் சிகிச்சைகளுக்கு உங்கள் Medisaveஐப் பயன்படுத்தலாம்.
- ஆனால் இது சுகாதார அமைச்சகம் மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிமுறைகளால் நிறுவப்பட்ட, வருடாந்திர வரம்புக்கு உட்பட்டது.
- உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தால், ஒபெட் தாதிகளிடம் நீங்கள் சரிபார்க்கலாம்.

உங்கள் சிகிச்சையில் ஏதேனும் சிக்கல் இருந்தால், உங்கள் மருத்துவர், மருந்தாளர் அல்லது தாதியை தொடர்பு கொள்ளவும்.

### OPAT (ஒபெட்) முகவரி:

டான் டொக் செங் (TTSH) மருத்துவ மையம், அடித்தளம் 2




## OPAT (ஒபெட்)
## வெளி நோயாளி ஆண்டிபயாடிக் மருந்து உட்செலுத்தல் சிகிச்சையகம்

டான் டொக் செங் (TTSH) மருத்துவ மையம், அடித்தளம் 2

**தொடர்பு எண்:**

6357 8275 (ஒபெட் சிகிச்சையகம்)
6357 7000 (மத்திய ஹாட்லைன்)

**TTSH சுகாதார நூலகம்**

சுகாதார நூலகத்தை அணுக, விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்

**ஒபெட்**

ஒபெட் விவரங்களை அணுக, விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்

இந்த தகவல் பயனுள்ளதாக இருந்ததா? படித்ததையொட்டி உங்களுக்கு ஏதேனும் கருத்து இருந்தால் தயவுசெய்து patienteducation@ttsh.com.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

Tan Tock Seng HOSPITAL National Healthcare Group
National Centre for Infectious Diseases National Healthcare Group

© டான் டோக் செங் மருத்துவமனை, 2022. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. ஜூன் 2022 நிலவரப்படி அனைத்து தகவல்களும் சரியானவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியும் டான் டாக் செங் மருத்துவமனையின் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கப்படவோ, நகலெடுக்கவோ, தலைகீழ் தொகுப்பாக்கப்படவோ , தழுவப்படவோ விநியோகிக்கப்படவோ, வணிக ரீதியாக சுரண்டவோ, தரவுத்தளத்தில், மீட்டெடுக்கும் அமைப்பில் காட்டப்படவோ சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அனுப்பவோ கூடாது.

PECC-IDS-ED-2022-1434T-v1

Tan Tock Seng HOSPITAL
National Centre for Infectious Diseases

**தொற்று நோய் துறை**

# வெளி நோயாளி ஆண்டிபயாடிக் மருந்து உட்செலுத்தல் சிகிச்சையகம் OPAT (ஒபெட்)



## ஒபெட் என்றால் என்ன?

டான் டோக் செங் மருத்துவமனையின் வெளி நோயாளி ஆண்டிபயாடிக் மருந்து உட்செலுத்தல் சிகிச்சையகம் - ஒபெட் (OPAT) கிளினிக்கில் அல்லது உங்கள் சொந்த வீட்டில், உங்கள் மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் நரம்பு வழி ஆண்டிபயாடிக் சிகிச்சையின் போக்கைத் தொடர உங்களை அனுமதிக்கிறது.


ஒபெட் கிளினிக் நோயாளிகளுக்கு ஆண்டிபயாடிக் சிகிச்சையை, மருத்துவமனையில் தங்காமல், பாதுகாப்பாகவும் வசதியாகவும் முடிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

## உங்கள் (ஒபெட்) சிகிச்சைக்கு முன் என்ன எதிர்பார்க்க வேண்டும்?

- ஒபெட் சிகிச்சைக்கு மருத்துவரின் பரிந்துரை
- ஒபெட் மருத்துவர்கள் உங்கள் சிகிச்சைக்கான பொருத்ததை மதிப்பீடுவர். சிகிச்சைக்கான விருப்பங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:
    - வீட்டில் ஒபெட்
    - கிளினிக்கில் ஒபெட்
    - பராமரிப்பாளர்களால் ஒபெட்
- நீங்கள் பொருத்தமான வேட்பாளராக இருந்தால், சிகிச்சைக் கட்டணங்கள், மெடிசேவ் உரிமைகோரல்கள், பின்தொடர்தல் வருகைகள் மற்றும் பல சிகிச்சை தொடர்பான முக்கியமான தகவல்களை பற்றி, உங்கள் ஒபெட் தாதி ஆலோசனை வழங்குவார்.

## ஒபெட் சிகிச்சைக்கு உங்களுக்கு என்ன தேவை?

- கேனுலா வழியாக சிகிச்சையை நிர்வகித்தல்; அல்லது
- புறமாக நடுவில் செருகப்பட்ட வடிகுழாய் (PICC): உங்கள் கையில் உள்ள நரம்பு வழியாகச் செருகப்பட்ட ஒரு சிறப்பு குழாய். PICC ஐப் பயன்படுத்துவது, நரம்புவழி கேனுலா செருகலைப் பயன்படுத்துவதை விட நோய்த்தொற்றின் அபாயத்தைக் குறைக்கிறது.



**புறமாக நடுவில் செருகப்பட்ட வடிகுழாய் (PICC)**

- ஆண்டிபயாடிக் மருந்து:

உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஆண்டிபயாடிக் மருந்தை PICC மூலம் செலுத்த, சிறப்பாக தயாரிக்கப்படும். சிகிச்சையின் போது, உங்கள் வழக்கமான நடைமுறையை நீங்கள் மீண்டும் தொடங்கலாம்.

- மருத்துவ விடுப்பு:

உங்கள் சிகிச்சையின் போது உங்களுக்கு மருத்துவ விடுப்பு வழங்கப்படும்.

## சிகிச்சையின் சாத்தியமான அபாயங்கள் மற்றும் அவற்றின் தடுப்பு நடவடிக்கைகள் என்ன?

1. உங்கள் ஒபெட் சிகிச்சையின் போது உங்களுக்கு சிகிச்சையளிக்கப்படும் தொற்று மோசமடையலாம்.

**<u>தடுப்பு நடவடிக்கைகள்:</u>**

- தேவைப்பட்டால் உங்கள் உடல் நலத்தை மேம்படுத்த, நீங்கள் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படலாம்.

2. கொடுக்கப்படும் ஆண்டிபயாடிக் மருந்தால், உங்களுக்கு தடிப்புகள், குமட்டல் உணர்வு அல்லது வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

**<u>தடுப்பு நடவடிக்கைகள்:</u>**

- உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஆண்டிபயாடிக் மருந்தை மாற்ற தேவைப்படலாம் அல்லது நீங்கள் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படலாம்.
- உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஆண்டிபயாடிக் மருந்தின் முதல் மருந்தளவு மருத்துவமனையில் நிர்வகிக்கப்படும். இது மருந்தினால் கடுமையான பக்க விளைவுகள் எதுவும் நிகழவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக.
- உங்கள் இரத்த எண்ணிக்கை, சிறுநீரகம் அல்லது கல்லீரல் செயல்பாட்டைப் பாதிக்கும் பக்கவிளைவுகளைக் கண்காணிக்கவும், ஆண்டிபயாடிக் சிகிச்சைக்கான உங்கள் உடல் நிலையை மதிப்பிடவும், வாராந்திர இரத்தப் பரிசோதனை எடுக்கப்படும்.

3. உங்கள் PICCயில் அடைப்பு, தொற்று அல்லது இடமாற்றம் ஏற்படலாம்.

**<u>தடுப்பு நடவடிக்கைகள்:</u>**

- ஒரு கதிரியக்க நிபுணர் அடைப்பை அகற்ற உதவுவார்.
- சாத்தியமான தொற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கு, ஒவ்வொரு முறை நீங்கள் ஒபெட் கிளினிக்கு வரும் போதும் PICC தளங்கள் ஆய்வு செய்யப்படும்.

## மருத்துவப் பரிசோதனைக்கு நான் எத்தனை முறை திரும்ப வேண்டும்?

- உங்கள் ஆண்டிபயாடிக் மருந்துச் சீட்டின் அடிப்படையில் உங்கள் தாதி உங்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளுக்கு ஏற்பாடு செய்வார். இது தினசரி / மாற்று நாட்களில் / வாரந்திர அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும். பொது விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் கூட ஏற்பாடு செய்யப்படும்.
- மருத்துவர் ஒவ்வொரு வாரமும் உங்களைப் பார்ப்பார் அல்லது உங்கள் தாதி ஏதேனும் கண்டறிந்தாளும் உங்களை மருத்துவப் பரிசோதனைக்கு அழைப்பார்கள்.

## என் சிகிச்சை முடிந்த பிறகு என்ன நடக்கும்?

- உங்களுக்குப் பரிந்துரைத்த மருத்துவர் அல்லது தொற்று நோய் மருத்துவரிடம், மருத்துவப் பரிசோதனைக்கு செல்ல ஏற்பாடு செய்யப்படும்.
- மேலும், இரத்தப் மற்றும் ஊடுகதிர் பரிசோதனை செய்யப்படும். ஆண்டிபயாடிக் மாத்திரைகள் வழங்கப்படும்.